# சென்னையில் தான் சிறந்த மருத்துவர்கள் உள்ளனர்

## பட்டமளிப்பு விழாவில் மேற்கு வங்க கவர்னர் பேச்சு



■ மணப்பாக்கம், மியாட் மருத்துவமனையில் நடந்த சிறப்பு பட்டமளிப்பு விழாவில், மேற்கு வங்க கவர்னர் நாராயணன் கலந்து கொண்டு, மியாட் மருத்துவமனையின் நிர்வாக இயக்குனர் மோகன்தாசுக்கு, அறிவியல் டாக்டர் பட்டம் வழங்கினார். உடன், கல்யாணி பல்கலை துணை தலைவர் திலீப்குமார் மோன்தா.

சென்னை, ஆக. 25-

''சென்னையில் உள்ள மருத்துவமனைகளில் மட்டுமே, அதிக தொழில்நுட்பம், சிறந்த மருத்துவ நிபுணர்கள் மற்றும் குறைந்த செலவில் மருத்துவ வசதி உள்ளது,'' என, மேற்கு வங்க கவர்னர் நாராயணன் தெரிவித்தார்.

மேற்கு வங்கம் மாநிலத்தில் உள்ள, கல்யாணி பல்கலைக்கழகம் சார்பில், சென்னை மியாட் மருத்துவமனை நிறுவனர் மோகன்தாசுக்கு, அறிவியல் டாக்டர் பட்டம் வழங்கும் விழா, மியாட் மருத்துவமனையில் நேற்று நடந்தது.

இதில், கல்யாணி பல்கலைக்கழக தலைவர் மற்றும் மேற்கு வங்க மாநில கவர்னர் நாராயணன், மோகன்தாசுக்கு, டாக்டர் பட்டம் வழங்கி பேசியதாவது:

உலகில் உள்ள பல நாடுகளுக்கு சென்றிருக்கிறேன். ஆனால், சென்னையில் உள்ள மருத்துவமனைகளில் மட்டுமே, அதிக தொழில்நுட்பம், சிறந்த மருத்துவ நிபுணர்கள் மற்றும் குறைந்த செலவில் மருத்துவ வசதி உள்ளது.

அதில், மியாட் மருத்துவமனை, அனைத்து வசதிகளுடன் கூடிய சிறந்த மருத்துவமனையாக திகழ்கிறது. 40 ஆண்டுகளாக மருத்துவ சேவை புரிந்து வரும் மோகன்தாசுக்கு, அறிவியல் டாக்டர் பட்டம் வழங்குவதில், பல்கலைக்கழகம் பெருமை அடைகிறது.

கல்யாணி பல்கலையின், 125 ஆண்டு பாரம்பரியத்தில், சம்பந்தப்பட்டவருக்கு நேரில் சென்று பட்டம் வழங்குவது, இது தான் முதல் முறை. அதற்காக, பல்கலையின் சேவையும், புகழும் பல மடங்கு உயரும் என்பதில் சந்தேகமில்லை.

இவ்வாறு அவர் பேசினார்.

பட்டமளிப்பு விழாவில், கல்யாணி பல்கலைக்கழக துணை தலைவர் திலீப்குமார் மோன்தா, மேம்பாட்டு அதிகாரி குசிக் முகர்ஜி மற்றும் மியாட் மருத்துவமனை மருத்துவர்கள் கலந்து கொண்டனர்.